**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.240/2016**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஜெகசாமி | **Caste** | : |
| **Father's Name** | : நல்லகாமு | **Calling** | : போக்குவரத்து காவலர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 46/2026 |
| | | **Dated** | : 31.08.2026 |

**31.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 **திரு. ஜெகசாமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,3,4 எதிரிகள் ஆஜர். 2,5 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் நகர் தெற்கு போக்குவரத்து காவல்துறையில் தலைமைக்காவலராக பணியில் இருந்துவருகிறேன். கடந்த 25.01.2016ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்தபோது சுமார் காலை 11.45 மணியளவில் நாகல் நகர் புதுார் ரிலையன்ஸ் டவர் அருகில் பக்தவசலம், சுரேஷ்குமார் அவர்கள் மற்றும் நானும் ரோந்துசென்ற போது தமிழக

வாழ்வுரிமை கட்சியைச் சேர்ந்த முத்துப்பாண்டி , அந்தோணி, கே.எஸ்.சுரேஷ், தம்பா மற்றும் ரூபன் ஆகியோர்கள் ரிலையன் டவர் மீது ஏறி நெல்லையில் தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவரை கைது செய்த வழக்கில் இருந்து விடுவிக்கக்கோரி கோசம் ஏற்படுத்தினார்கள். சார்பு ஆய்வாளர் திரு.பக்தவசலமும் டவரில் இருந்து கீழ் இறங்குமாறு அறிவுறித்தினார். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். பின்பு அவர்களை கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். அவர் வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் டவர் உள்ள பகுதி பல மக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். நான் போலிசாா் கொடுத்த வாக்குமூலத்தில் பொதுமக்கள் யாரும் பார்த்ததாகவோ நின்றதாகவோ ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் பகல் 11.45 மணி என்றால் சரிதான். அந்த இடத்தில் நாங்கள் பணி புரிந்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.

எதிரிகள் தமிழக வாழ்வுரிமை கட்சியில் இருந்தார்கள் என்பதற்காக எந்தவொரு ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டவரில் ஏறி தற்கொலை முயற்சி செய்ததை தடுப்பதற்காக தீயணைப்பு துறைக்கு போன் செய்து வரச்சொன்னேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வேறு யாரோ செய்த சம்பவத்தை நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.31 13:05:09 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.240/2016**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சுரேஷ்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : முனியாண்டி | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர்(ஓய்வு) |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **62/2026** |
| | | **Dated** | : | **31.08.2026** |

**31.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திரு. சுரேஷ்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,3,4 எதிரிகள் ஆஜர். 2,5 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று திண்டுக்கல்லில் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன்.

கடந்த 25.01.2016ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது தமிழக வாழ்வுரிமை கட்சியைச்சேர்ந்த சில நபர்கள் சுமார் 5 நபர்கள் நாகல் நகர் புதுார் ரிலையன்ஸ் டவர் மேல் ஏறி தமிழக வாழ்வுரிமைக்கட்சியின் தலைவர் வேல்முருகன் என்பவரை விடுதலை செய்யக்கோரி முழக்கம் இட்டனர். நானும் சார்பு ஆய்வாளர் திரு.பக்தவசலமும் டவரில் இருந்து கீழ் இறங்குமாறு அறிவுறித்தினோம். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். பின்பு அவர்களை கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். அவர் வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இவ்வழக்கின் புகார்தாரர் நான்தான் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் டவர் உள்ள பகுதி பல மக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். நான் போலிசாா் கொடுத்த வாக்குமூலத்தில் பொதுமக்கள் யாரும் பார்த்தததாகவோ நின்றதாகவோ ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் பகல் 11.45 மணி என்றால் சரிதான். அந்த இடத்தில் நாங்கள் பணி புரிந்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.

எதிரிகள் தமிழக வாழ்வுரிமை கட்சியில் இருந்தார்கள் என்பதற்காக எந்தவொரு ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டவரில் ஏறி தற்கொலை முயற்சி செய்ததை தடுப்பதற்காக தீயணைப்பு துறைக்கு போன் செய்து வரச்சொன்னேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வேறு யாரோ செய்த சம்பவத்தை நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.31 13:05:17 +0530

Judicial Magistrate No.II
Dindigul.